


# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்

ஆகஸ்ட் 2022

# அறிமுகம்

சுதந்திரத்திற்குப் பின்னரான நாட்டின் வரலாற்றில் மோசமான பொருளாதார நெருக்கடியை தற்போது நாடு முகம்கொடுத்து வருகின்றது. சித்திரை மாதத்தில் இலங்கை முதல்முறையாக அதன் கடன் செலுத்தும் தவணையில் கடன் செலுத்தத் தவறியது. அன்றிலிருந்து பணவீக்கத்திற்கும் அதற்கும் மேலாக எரிபொருள், உணவு, மருந்துகள் போன்றவற்றின் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கும் மக்கள் முகம்கொடுத்தனர். அதன் விளைவாக, நூறு, ஆயிரம் என்ற கணக்கில் இலங்கையர்கள் நாடளாவிய ரீதியில் இணைந்து கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பொருளாதாரத்தை முறையற்ற விதத்தில் நிருவாகம் செய்து முன்னேற்றமில்லாத பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டை தள்ளிய ராஜபக்ஷ குடும்பத்திற்கும் எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். இளைஞர் யுவதிகளின் இத்தகைய ஜனநாயக மற்றும் வன்முறையற்ற சிவில் செயற்பாடுகளின் விளைவாக கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பிச் சென்றதுடன், இராஜினாமாவையும் சமர்ப்பித்தார்.

ஏற்பட்ட இந்த அதிகார இடைவெளியில், ரணில் விக்கிரமசிங்க எட்டாவது நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதியாக பாராளுமன்ற உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்டார். இப்பின்புலத்தில், நாடு முழுவதிலும் பொதுமக்கள் அனுபவங்களையும் மற்றும் மக்கள் போராட்டம் தொடர்பிலான கருத்துக்களையும் அத்தோடு தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி பற்றியதான வேறுபட்ட அம்சங்களையும் பற்றி விளங்கிக்கொள்ளும் நோக்கில் கருத்துக்கணிப்பொன்று வடிவமைக்கப்பட்டது.

இவ் ஆய்வானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்கணிப்புப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் 2022ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்றது. வயது, பால் மற்றும் பொருளாதார பின்னனி போன்றவற்றின் அடிப்படையில் வேறுபட்ட, சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த 1100 நபர்கள் மொத்தமாக தெரிவுசெய்யப்பட்டு நேருக்கு நேர் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுக்குழுவானது கலாநிதி. பிரதீப் பீரிஸ், மா.கிருஷ்ணமூர்த்தி, முதிதா பத்திரன, இஷாரா ஜெயரத்தின மற்றும் அஸ்ரா பாயிஸ் ஆகியோரை உள்ளடக்கியது. இந்தக் கற்கையை வெற்றிகரமாக செய்து முடிக்க உதவிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களின் ஆதரவிற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அட்டை நிழற்படத்தை வழங்கிய 'மாற்றம்' (https://maatram.org) இணையத்தளத்தின் ஆசிரியர் செல்வராஜா ராஜசேகரிற்கு எமது நன்றிகள்.

# முறைமையியல்

இந்த ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டியினது மூன்றாம் அலைக்கு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தைக் கொண்டு பிரதான இனத்துவ குழுக்களைச் (சிங்களவர்கள், தமிழர்கள், மலையத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள்) சேர்ந்த 1100 பதிலளிப்பவர்கள் உடனான நேர்காணல் பயன்படுத்தப்பட்டது. 25 மாவட்டங்களையும் சேர்ந்த நகர்புற மற்றும் கிராமப்புற பிரதேசங்களைச் சேர்ந்த ஆண்-பெண் இருதரப்பினரையும் உள்ளடக்கிய மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. எழுமாற்று மாதிரியெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டு, பதிலளிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதோடு, மாதிரி இடங்களை தெரிவுசெய்வதற்கு பல்வேறு மட்ட எழுமாற்று மாதிரியெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. கணிப்பீட்டிற்கான கள வேலைகள் 2022 ஆவணி முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை நடைபெற்றதுடன், சோஷல் இன்டிகேட்டரின் வெளிக்கள வலையமைப்புகள் பயன்படுத்தப்பட்டன. இவ் கற்கையில் நான்கு பிரதான சமூகங்களைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் இருசாராருமாக மொத்தம் 82 வெளிக்கள ஆய்வாளர்கள் பணியாற்றினார்கள். சேகரிக்கப்பட்ட தரவின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக மொத்த மாதிரியில் ஏறத்தாழ 10% மானவைகள் தர பரீசிலினை செய்யப்பட்டன. தரவானது உண்மையான மாவட்ட மற்றும் இனத்துவ விகிதாசாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் மதிப்பேற்றம் செய்யப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரத் தொகுப்பைப் பயன்படுத்தி தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# சாராம்சம்

## வருமானம் மற்றும் செலவீனம்

- குறிப்பிடத்தக்களவு பெரும்பான்மையான இலங்கையர்கள் (80%) தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு தமது வருமானம் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிடுகின்றனர்.
- ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது பிரதேச சபை பகுதிகளில் இருக்கின்ற மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதில் அதிக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்.

## நெருக்கடி நிலைமையினால் ஏற்படும் சிரமங்கள்/ இயலாமைகள்

- அதி பெரும்பான்மையானவர்கள் (83%) தாம் ஆரம்பத்தில் கொள்வனவு செய்த உணவு பொருட்கள் மற்றும் உணவின் தரம் போன்றவற்றை குறைத்துக்கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.
- சுமார் 42% மானவர்கள் தினமொன்றுக்கு தாம் எடுத்துக்கொள்ளும் உணவின் அளவை அல்லது உண்ணும் உணவின் தடவைகளைக் குறைத்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.
- பெரும்பான்மையான இலங்கையர்கள் (66%) மருந்துகள் அல்லது மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கின்றனர்.
- குறிப்பிடத்தக்க சதவீதத்தினர் (87%) அதிகரித்துள்ள வீட்டுச் செலவீனங்களைப் பூர்த்திசெய்து கொள்வதில் சிரமங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.
- மூன்றில் ஒன்றை விடவும் சற்று அதிகமான இலங்கையர்கள் தாங்கள் அல்லது தங்கள் குடும்பத்திலுள்ள எவரேனும் தொழிலை இழந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

## தலைவர்கள் மீதான நம்பிக்கை

- தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது பற்றி சரியான தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் அனுரகுமார திஸாநாயக்க மீது அதிக சதவீதமான மக்கள் (48.5%) நம்பிக்கை கொண்டுள்ளனர்.
- 36.6% மானவர்கள் ரணில் விக்கிரமசிங்க சரியான தீர்மானங்களை எடுப்பாரென நம்பிக்கைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்ற அதேவேளை, 29.1% மானவர்கள் சஜித் பிரேமதாச மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்
- தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது பற்றி சரியான தீர்மானங்கள் எடுப்பது தொடர்பில் மக்களால் மிகக் குறைந்தளவு நம்பப்படுகின்ற தலைவர் (11.9%) மஹிந்த ராஜபக்ஷ ஆவார்.
- சிங்கள சமூகத்துடன் ஒப்பிடும் போது சஜித் பிரேமதாச மீது சிறுபான்மை சமூகங்கள் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதைக் காணலாம்.
- வயதில் கூடியவர்களுடன் ஒப்பிடும்போது இளம் வயதினர் அனுரகுமார திஸாநாயக்க மீது அதிக ஆதரவைக் கொண்டிருக்கின்றார்கள்.

## மக்கள் போராட்டத்தை/ ஆர்ப்பாட்டத்தை வழிநடாத்திய இளைஞர் யுவதிகள் மீதான கருத்துக்கள்

- மக்கள் போராட்டத்தில்/ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் யுவதிகள் மீது பெரும்பான்மையான இலங்கையர் நேர்நிலையான கருத்துகளை வெளிப்படுத்துகின்றனர்.
- மக்கள் போராட்டம்/ ஆர்ப்பாட்டமானது சமூகம்/ குடியுரிமை தொடர்பான அக்கறை கொண்ட இளைஞர் யுவதிகளால் நாட்டை சிறந்த ஜனநாயகம் உடைய நாடாக மாற்றியமைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டது என குறிப்பிடத்தக்க சதவீதமான இலங்கையர் (84%) ஏற்றுக்கொள்கின்றார்கள்.
- மக்கள் போராட்டம்/ ஆர்ப்பாட்டமானது அரசியல் தொடர்பான தெளிவற்ற அதேநேரம் போதைவஸ்து பயன்படுத்தும் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டது என்ற கருத்தை அநேகமான இலங்கையர்கள் (88%) மறுக்கின்றனர்.
- மக்கள் போராட்டத்தில்/ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் யுவதிகள் வன்முறை குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்கின்ற கருத்துடன் ஏறத்தாழ 82% மான மக்கள் உடன்படவில்லை.

## மக்கள் போராட்டத்தை/ ஆர்ப்பாட்டத்தை வழிநடத்திய இளைஞர் யுவதிகளை ஜனாதிபதிச் செயலக வளாகத்திலிருந்து வெளியேற்றியமை

- ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதியினர் மக்கள் போராட்டத்தை/ ஆர்ப்பாட்டத்தை வழிநடத்திய இளைஞர் யுவதிகளை ஜனாதிபதிச் செயலக வளாகத்திலிருந்து வெளியேற்றியமையை அனுமதிக்கவில்லை. இது நான்கு இனத்தவர்கள் மட்டுமன்றி கிராமிய, நகர்புற மற்றும் அனைத்து வயது மட்டத்தவர்கள் மத்தியிலும் காணப்பட்ட பொதுவான கருத்தாகும்.

## அவசரகாலச் சட்ட அமுலாக்கம்

- 27 ஆடி 2022 அன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டம் தொடர்பில் நாட்டிலுள்ள பெரும்பான்மையானவர்கள் (65%) ஆட்சேபனை தெரிவிக்கின்றனர்.
- இன அடிப்படையில், சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு சமூகத்தவர்களில் சுமார் நான்கில் ஒரு பகுதியினர் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

## தற்போதைய அரசாங்கத்திற்கு போராட்டக்காரர்களின் முன்மொழிவுகள்

- கிட்டத்தட்ட அனைவருமே எல்லா அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் கணக்கில் வராத அவர்களின் சொத்துக்கள் அரசினால் பறிமுதல் செய்யப்படல் வேண்டும் என தெரிவிக்கின்றனர்.
- மிக விரைவில் பொதுத்தேர்தல் நடாத்தப்படுதல் வேண்டும் என பத்தில் ஒன்பது இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர்.
- 20ஆவது சீர்திருத்தம் நீக்கப்பட்டு 19ஆவது சீர்திருத்தம் போன்றதொரு சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் என அதி பெரும்பான்மையானவர்கள் (87%) தெரிவிக்கின்றனர்.
- பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்படல் வேண்டும் என்ற முன்மொழிவினை 83%இற்கு சற்று அதிகமானவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை முழுமையாக இல்லாதொழிக்கப்படல் வேண்டுமென இலங்கையர்களில் நான்கில் மூன்று பேர் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச சமூகத்தின் ஆதரவு

- இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முன்வந்து உதவக்கூடிய நாடு சீனா என நான்கில் ஒரு பகுதியினர் இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர்.
- இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முன்வந்து உதவக்கூடிய நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா என்று ஐந்தில் ஒரு பகுதி இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர்.
- இளவயதினரைவிடவும் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட இலங்கையர்கள் முன்வந்து உதவக்கூடிய நாடு சீனா என்று தெரிவிக்கின்றனர்.

## இயல்புநிலையை அடைதல் தொடர்பிலான நம்பிக்கை

- ஏறத்தாழ 60% மானவர்கள் இலங்கை இயல்பு நிலையை அடைவதற்கு நீண்டகாலம் செல்லும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.
- அனைத்து இன, பிரதேச மற்றும் அனைத்து வயதினர் மத்தியிலும் இவ் அவநம்பிக்கை வெளிப்படுகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org/

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/1B,1/1, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94112 826 010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: krishna@cpasocialindicator.org